


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.9.2025) தலைமைச் செயலகத்தில், திருமதி வேதவள்ளி ஜெகதீசன் "சிறந்த தமிழ் உச்சரிப்பு விருது" 2023 பெற்றமைக்காக குடும்பத்துடன் சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.9.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டபோது, ஜெர்மனி நாட்டின், கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையால் வழங்கப்பட்ட பழங்கால ஓலைச்சுவடிகளை பாதுகாத்திட, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளையின் அறங்காவலர் ஆர்.பாலகிருஷ்ணன், இயக்குநர்கள் பிரகாஷ் மற்றும் சுந்தர் ஆகியோரிடம் வழங்கினார்.

### கொலோன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையால் வழங்கப்பட்ட

# பழங்கால ஓலைச்சுவடிகள் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் பாதுகாக்கப்படும்!

## அறங்காவலர் – இயக்குநர்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப். 11 -

**கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையால் வழங்கப்பட்ட பழங்கால ஓலைச்சுவடிகளை, பாதுகாத்திட ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் அறங்காவலர் மற்றும் இயக்குநர்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.9.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறைபயணம்மேற்கொண்டபோது, ஜெர்மனி நாட்டின், கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையால் வழங்கப்பட்ட பழங்கால ஓலைச்சுவடிகளை, பாதுகாத்திட ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளையின் அறங்காவலர் ஆர்.பாலகிருஷ்ணன், (ஓய்வு), இயக்குநர்கள் பிரகாஷ் மற்றும் சுந்தர் ஆகியோரிடம் வழங்கினார்.

பழந்தமிழ் இலக்கியச் சுவடிகள், பல முதற்பதிப்புகள் என 40 ஆயிரத்திற்கும் அரிய தமிழ் நூல்களைக் கொண்ட கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை நூலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1.9.2025 அன்று நேரில் சென்று பார்வையிட்டார்.

ஐரோப்பாவில் தமிழியல் ஆய்வுகளுக்கான முக்கிய மையமான ஜெர்மனி நாட்டிலுள்ள கொலோன் பல்கலைக்கழக தமிழ்த்துறை தொடர்ந்து, தொய்வின்றி, இயங்கிட தமிழ்நாடு அரசின் சார்பில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் உடனடியாக கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்கு வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 7.7.2021 அன்று உத்தரவிடப்பட்டு, வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குவதற்கான

# சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பரிந்துரை செய்திட வல்லுநர் குழு அமைப்பு!

## அரசாணை வெளியீடு! அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, செப்.11

முதலமைச்சர் அவர்கள் கடந்த 11.08.2025 அன்று திருப்பூர் மாவட்டகள ஆய்வின்போது விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்கு ஏதுவாக வல்லுனர் குழு அமைத்து வெளியிடப்பட்டுள்ளது என்று சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அரவைக்கு போதுமான கரும்பு இல்லாத காரணத்தாலும், சுமார் 60 ஆண்டுகள் பழமையான இயந்திரங்களின் காரணமாக அரவையின்போது அடிக்கடி ஏற்பட்ட இயந்திர கோளாறுகள் காரணமாகவும் கடந்த 202324 அரவைப் பருவம் முதல் தற்காலிகமாக ஆலை இயங்காமல் இருந்து வருகிறது.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதிகளைச் சார்ந்த விவசாயிகள், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை புனரமைத்து மீண்டும் இயக்க வேண்டுமென தொடர்ந்து அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக, கடந்த 11.08.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டபோது, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதியைச் சார்ந்த விவசாயிகள் முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை புனரமைத்து மீண்டும் இயக்குவதற்கு கோரிக்கை வைத்தனர். விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் கோரிக்கையை உடனடியாக ஏற்று, அன்றைய தினமே அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் புனரமைத்து மீண்டும் இயக்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து பரிந்துரை செய்ய ஏதுவாக ஒரு வல்லுனர் குழு அமைத்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிப்பை வெளியிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, தற்போது சர்க்கரைத்துறை இயக்குநர் தலைமையில் கூடுதல் இயக்குநர், சர்க்கரைத்துறை, தொழில்நுட்பம் சார்ந்த உயர் அலுவலர்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள், கரும்பு இனப்பெருக்க நிறுவன விஞ்ஞானிகள் மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆகியோரை உள்ளடக்கிய பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு வல்லுனர் குழு அமைத்து அரசாணை வெளியிட உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள வல்லுனர் குழு அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஆய்வு செய்து, விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரது கருத்துக்களையும் கேட்டறிந்து அரசுக்கு உரிய அறிக்கை சமர்ப்பிக்கும். அந்தக் குழு அறிக்கையின் அடிப்படையில், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குவது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படுமென சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

### கன்னியாகுமரியில் விவேகானந்தர் சிலைக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும் செல்லும்

# கண்ணாடி பாலம் மிகவும் பாதுகாப்பாக உள்ளது!

## தலைமைச் செயலகத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!




*சென்னை, செப். 11-*

*கன்னியாகுமரியில் விவேகானந்தர் சிலைக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும் செல்லும் கண்ணாடி பாலம் மிகவும் பாதுகாப்பாக உள்ளது. தினந்தோறும் பொது மக்கள் பார்வையிட்டு வருகிறார்கள் பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (10.9.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து பேட்டி அளித்தார்.*

*அமைச்சர் எ.வ.வேலு அளித்த பேட்டி வருமாறு:-*

*கன்னியாகுமரியில் விவேகானந்தர் சிலைக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும் செல்லும் கண்ணாடி பாலம் கட்டப்பட்ட பிறகு சுமார் 17 இலட்சம் பொது மக்கள் பார்வையிட்டுள்ளனர். அவ்வப்போது முறையான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.*

*16.8.2025 அன்று பராமரிப்புப் பணிகள் மேற் கொண்ட போது, 8 மீட்டர் உயரத்தில் ஆர்ச்சில் உள்ள போல்டுகளை சரி செய்யும் பொழுது சுத்தியல் கை தவறி விழுந்து விட்டது. அதன் விளைவாக கண்ணாடியின் மேல் பகுதியில் மட்டும் மெல்லிய விரிசல் ஏற்பட்டது. உடனடியாக சேதமடைந்த இடத்தில் மட்டும் பாதசாரிகள் பாதுகாப்பு கருதி தடுப்பாண்கள் அமைக்கப்பட்டது. விரிசல் ஏற்பட்ட கண்ணாடியை 2.00 மீட்டர் நீளமும், 2.40 மீட்டர் அகலமும், அதே வடிவமைப்பில் அதே தரத்துடன் கம்பி இழையிலான கண்ணாடி 08.09.25 அன்று பொருத்தப்பட்டது.*

*மேலும், போதுமான எடையினைக் கொண்டு பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு தாங்குத்திறன் உறுதி செய்யப்பட்டதில் கண்ணாடி பாதுகாப்பாக உள்ளது. 77 மீட்டர் நீளமுடைய கண்ணாடி பாலத்தில், ஒரே நேரத்தில், 650 நபர்கள் செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*மேலும், ஒப்பந்ததாரரின் பராமரிப்பு காலம் 10 ஆண்டு காலம் என்பதால், சேதமடைந்த கண்ணாடியினை ஒப்பந்ததாரரின் செலவிலேயே சரி செய்யப்பட்டுவிட்டது.*

*தற்போது, அனைத்து பார்வையாளர்களும், கண்ணாடி பாலத்தைப் பார்வையிட்டு வருகின்றனர் என்று செய்தியாளர்கள் சந்திப்பில், அமைச்சர் தெரிவித் துள்ளார்.*

*செய்தியாளர்கள் சந்திப்பின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அரசுச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் ஆர்.செல்லத்துரை, நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர் ஆகியோர் உடனிருந்தனர்.*

### "மாநில சுயாட்சிக்காக ஒன்றிய அரசின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடிவரும் தமிழ்நாடு முதலமைச்சரின் கரங்களை வலுப்படுத்துவோம்!"

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - காஞ்சிபுரம் அண்ணா இல்லத்திலிருந்து தேர்தல் பயணத்தைத் தொடங்கினார்!

சென்னை, செப்.11 -

காஞ்சிபுரத்தில் துணை முதலமைச்சரும் - கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (09-09-2025) தேர்தல் பயணத்தைத் தொடங்கியது குறித்த கழகத்தின் செய்தி அறிக்கை வருமாறு :-

பேரறிஞர் அண்ணாவின் வழியில், காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணாவின் இல்லத்தில், அவரை வணங்கி 2026க்கான தனது தேர்தல் பயணத்தைத் துணை முதலமைச்சரும் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தொடங்கினார்.

மாநில அளவில் திமுகவின் கட்டமைப்பை வலுப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, மாவட்டம்தோறும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பயணம் மேற்கொள்கிறார்.

அங்கே கழக மாவட்டத்தின் அனைத்து நிலையிலுள்ள நிர்வாகிகளையும் நேரில் சந்தித்து கலந்துரையாடுகிறார்.

இக்கூட்டங்களில் நிர்வாகிகளுக்கு கழகத்தின் பாரம்பரிய அடையாளமான கருப்பு சிவப்பு துண்டு அணிவிக்கின்றார். அனைவரின் கருத்துகளும் கேட்கப்பட வேண்டும் என்கிற ஜனநாயகப்பூர்வமான நோக்கத்தில் கருத்துப் பெட்டிகள் வைக்கப்பட்டு, படிவங்களும் வழங்கப்பட உள்ளன. இதன்மூலம் நிர்வாகிகள் தங்களது கருத்துகள், கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகளை விரிவாகப் பகிர்ந்துகொள்ள முடியும்.

இந்த படிவங்களைத் துணை முதலமைச்சர் படித்து, அதை முதலமைச்சர் அவர்களிடம் நேரடியாகக் கொண்டு செல்ல திட்டமிட்டுள்ளார்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற இன்றைய கூட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையில் சிறப்பாகச் செயல்பட்ட முதல் பத்து நிர்வாகிகளுக்கு பாராட்டுகள் தெரிவித்து, அவர்களுடன் துணை முதலமைச்சர் அவர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

கருத்துப் பெட்டியிலிருந்து சில படிவங்களை தேர்ந்தெடுத்து, அவை குறித்து நிர்வாகிகளுடன் உரையாடி, அவர்களின் கேள்விகளுக்கும் துணை முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தார். பல்வேறு சங்கங்களைச் சேர்ந்தவர்களுடனும் தன்னார்வலர்களுடனும் கலந்துரையாடினார்.

பேரறிஞர் அண்ணாவின் முதன்மை கொள்கையான மாநில சுயாட்சி முழக்கத்தை முன்வைத்து ஒன்றிய அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக போராடிவரும் தமிழ்நாடு முதலமைச்சரின் கரங்களை வலுப்படுத்த உழைக்க வேண்டும் என துணை முதலமைச்சர் வலியுறுத்தினார்.


**தமிழ்நாடு அரசு**
**செய்தி-மக்கள் தொடர்பு (விளம்பரம்)த் துறை**
**தலைமைச் செயலகம், சென்னை-9.**

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998-ன் படி தமிழ்நாடு அரசின் சார்பில். செய்தி-மக்கள் தொடர்புத்துறை வெளியிடும் மாநில மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் (State and District Tender Bulletin) ஓர் ஆண்டு அச்சிடும் பணிக்கு இதே போன்று அரசு அல்லது அரசு சார்ந்த. அமைப்புகளின் இதழ் அச்சிடும் பணியில் முன் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து மட்டும் 23.09.2025 பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்த விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 23.09.2025 மாலை 4.00 மணிக்கு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கான ஒப்பந்த விலைப்புள்ளிகள் சென்னையில் இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, 9வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 9 அவர்கள் அலுவலகத்தில் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

மாவட்டங்களில் ஒப்பந்த விலைப்புள்ளிகள் 38 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் அலுவலகங்களில் 23.09.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பெறப்பட்டு அன்று மாலை 4.00 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களால் திறக்கப்படும்.

மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் அச்சிடும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் இதர விபரங்கள் சென்னையில் "இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, 9வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009" என்ற பெயரில் வங்கியில் பெறப்பட்ட ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாவட்டங்களை பொறுத்தமட்டில் மேலே குறிப்பிட்டுள்ள அந்தந்த "**மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலரின் பெயரில்**" (பதவியின் பெயரில்) வங்கியில் பெறப்பட்ட ரூ.100 (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்புத்தொகை (EMD) ரூ.1000/- ரூபாய் ஆயிரம் மட்டும்) 23.09.2025 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விற்பனை நிறுத்தப்படும். பணம் ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

செமதொஇ/5021/ஒப்பந்தப்புள்ளி/2025
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**திடக்கழிவு மேலாண்மை துறை**
தி. க. மே. து. ந. க. எண். அ7 / 4075 - 4076 / 2025

**ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை**

**திடக்கழிவு மேலாண்மை துறையில் proposed Mega Bailing Centre at Manali in Dn.22, Unit 5, Zone 2 ஒப்பம் கோர மேற்பார்வை பொறியாளர் (திகமே) அவர்களால் வரவேற்கப்படுகின்றன.**

தி. க. மே. து. ந. க. எண். அ7 / 4075 / 2025
**Construction of Infrastructure facility building - பணியின் மதிப்பு ரூ.3.70 கோடி**

தி. க. மே. து. ந. க. எண். அ7 / 4076 / 2025
**Construction of required concrete floor and G. I. sheet roofed building பணியின் மதிப்பு - ரூ.5.50 கோடி**

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி நாள் | 10.10.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் |
| ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் | 10.10.2025 பிற்பகல் 4.00 மணிக்கு |

ஒப்பந்ததாரர்கள் **tntenders.gov.in** இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விவரங்கள் தெரிந்துகொள்ளலாம்.
முன்வைப்பு தொகை ஒரு சதவீதம் **E-Tender portal** மூலம் **online** பரிவர்த்தனை முறையில் செலுத்த வேண்டும் விவரங்கள் ஒப்ப ஆவணம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 4955 / ஒப்பந்தப்புள்ளி / 2025
மேற்பார்வை பொறியாளர் (திகமே)




திருவெறும்பூர் தொகுதியில் துவாக்குடி நகராட்சி மக்களுக்காக அன்பில் அறக்கட்டளை மற்றும் அப்பல்லோ மருத்துவமனையுடன் இணைந்து நடைபெறும் மாபெரும் இலவச மருத்துவ முகாமினை திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். திருவெறும்பூர் துவாக்குடி சமுதாய நலக் கூடத்தில் இம்முகாம் நடைபெற்று வருகிறது இம்முகாமில் துவாக்குடி நகராட்சி மக்கள் பங்குபெற்று பயன் பெற்று வருகின்றனர். முகாமில் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு, ரத்த அழுத்தம் சரிபார்த்தல், இ.சி.ஜி. எடுத்தல், நுரையீரல் பரிசோதனை நடைபெறுகிறது. பொது மருத்துவர் ஆலோசனை வழங்கப்படுகிறது. முகாமில் அன்பில் அறக்கட்டளையின் சார்பாக முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு முதலுதவி பெட்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் துவாக்குடி நகர மன்றத் தலைவர் காயாம்பு, மருத்துவர்கள் சுரேஷ், தமிழரசன், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.